TAMILTH Madurai 1 Regional_02 222100 HT166128

ஆடி பெருக்கு திருவிழாவை முன்னிட்டு

திண்டுக்கல்லில் வாழைத்தார்கள் விலை அதிகரிப்பு

■ திண்டுக்கல்

ஆடி பெருக்கு திருவிழாவை முன்னிட்டு, திண்டுக்கல்லில் வாழைத்தார்கள் விலை அதிகரித்து விற்பனையானது.

திண்டுக்கல் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் அதிக பரப்பளவில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதிகளில் விளையும் வாழைத்தார்கள், திண்டுக்கல் ரயில் நிலையம் அருகேயுள்ள சிறுமலை செட் பழங்கள் விற்பனை செய்யும் சந்தைக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.

பின்னர், இங்குள்ள கமிஷன் கடைகள் மூலம் ஏலம் விடப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

● திண்டுக்கல் சிறுமலைசெட் சந்தையில் விற்பனைக்கு வந்த வாழைத்தார்கள். படம்: நா.தங்கரத்தினம்

இங்கு எலுமிச்சை, பலாப்பழம், வாழை உள்ளிட்ட பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. எலுமிச்சை ஏலம் திங்கள், புதன், வெள்ளி என 3 நாட்கள் நடைபெறுகிறது.

வாழைத்தார் ஏலம் திங்கள், வியாழக்கிழமைகளில் நடைபெறுகிறது.

நேற்று நடைபெற்ற ஏலத்துக்கு விவசாயிகள் அதிக எண்ணிக்கையிலான வாழைத்தார்களை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

நேற்றைய ஏலத்தில் ஒரு தார் செவ்வாழை ரூ.1,200, கற்பூரவல்லி ரூ.1,000, ரஸ்தாளி ரூ.700, நாட்டுக்காய் ரூ.700-க்கும் விற்பனையானது.

ஆடி பெருக்கு விழாவுக்கான தேவை அதிகரிப்பு காரணமாக, கடந்த வாரத்தைவிட இந்த வாரம் விலை உயர்ந்துள்ளது. இதனால் வாழை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

● மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் ஆடி முளைக்கொட்டு உற்சவத்தின் 5-ம் நாளான நேற்று மாலை வெள்ளி ரிஷப வாகனத்தில் எழுந்தருளிய மீனாட்சி அம்மன்.

● மதுரை அழகர்கோவில் கள்ளழகர் கோயிலில் பக்தர்கள் செலுத்திய உண்டியல் காணிக்கை எண்ணும் பணியில் ஈடுபட்டிருந்த பள்ளி மாணவர்கள்.

கள்ளழகர் கோயில் உண்டியல் காணிக்கை ரூ.53 லட்சம்

■ மதுரை

மதுரை அழகர்கோவில் கள்ளழகர் கோயிலில் நேற்று உண்டியல் காணிக்கை எண்ணும் பணி நடைபெற்றது. துணை ஆணையர் யக்ஞ நாராயணன் தலைமை வகித்தார். கூடலழகர் கோயில் உதவி ஆணையர் பிரதீபா முன்னிலை வகித்தார். ஆய்வர் கார்த்திகா, அறங்காவலர் குழு உறுப்பினர்கள் மேற்பார்வையில் கோயில் பணியாளர்கள், வங்கி ஊழியர்கள், பள்ளி மாணவர்கள் காணிக்கை எண்ணும் பணியில் ஈடுபட்டனர். இதில் ரூ.53,54,409, தங்கம் 32 கிராம் காணிக்கையாக கிடைத்தன.

மதுரையில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்

அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பங்கேற்பு

■ மதுரை

மதுரை மாநகராட்சி மண்டலம்-3 பெரியார் பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள சுற்றுலா அரங்கில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நேற்று நடைபெற்றது. இதற்கு மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார், மாநகராட்சி ஆணையர் சித்ரா ஆகியோர் தலைமை வகித்தனர். மேயர் இந்திராணி முன்னிலை வகித்தார்.

இம்முகாமை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தொடங்கி வைத்தார். பின்னர் துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு மனுதாரர்களுடன் கலந்துரையாடினார். அப்போது அவர் பேசுகையில், தமிழக முதல்வர் பொதுமக்களின் குறைகளை வீட்டுக்கே தேடி சென்று கேட்டறிந்து தீர்வு காணும் வகையில் 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற சிறப்புத் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்.

● மதுரை மாநகராட்சி மண்டலம்-3 பெரியார் பேருந்து நிலைய வளாக சுற்றுலா அரங்கில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தொடங்கி வைத்தார்.

அதன்படி மதுரை மாவட்டத்தில் மொத்தம் 347 சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளன. இதுவரை நகரப் பகுதியில் 22 முகாம், ஊரகப் பகுதிகளில் 43 முகாம் என மொத்தம் 65 முகாம்கள் நடத்தப்பட்டு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெற 32,055 மனுக்கள், பிற சேவைகளைப் பெற 27,373 மனுக்கள் என மொத்தம் 59,428 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதில் 5,320 மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட்டுள்ளது என்றார்.

இதில் துணை மேயர் நாகராஜன், மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மதுரை உயர்மறை மாவட்ட புதிய பேராயர் நாளை பொறுப்பேற்பு

■ மதுரை

கத்தோலிக்க திருச்சபையின் மதுரை உயர்மறை மாவட்ட புதிய பேராயராக அந்தோணி சாமி சவரிமுத்து நாளை பொறுப்பேற்கிறார் என உயர் மறை மாவட்ட நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து உயர் மறை மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கை:

தூத்துக்குடி மாவட்டம் வடக்கு வண்டானம் கிராமத்தில் சவரிமுத்து - மரியம்மாள் தம்பதியின் மகனாக 1960-ம் ஆண்டு பிறந்தவர் அந்தோணிசாமி சவரிமுத்து. தனது குருத்துவப் பயிற்சியை பெங்களூரு புனித பேதுரு பாப்பிறை குரு மடத்தில் முடித்த அவர், 1987-ம் ஆண்டு மே மாதம் 26-ம் தேதி பாளையங்கோட்டை மறைமாவட்ட குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். ஆங்கிலத்தில் முதுகலைப் பட்டம் பெற்றிருக்கிற இவர், பிரான்ஸ் நாட்டில் உள்ள பாரிஸ் பல்கலைக்கழகத்தில் திருஅவைச் சட்டத்தில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார்.

பாளையங்கோட்டை ஆயரின் செயலாளர், குரு மட அதிபர், திருஅவைச் சட்ட பேராசிரியர், பாளையங்கோட்டை மறைமாவட்டத்தின் முதன்மை குரு என பல்வேறு பணிகளை மேற்கொண்ட இவர், 2019-ம் ஆண்டு பாளையங்கோட்டை மறைமாவட்ட ஆயராக அருள்பொழிவு செய்யப்பட்டார். 2024-ம் ஆண்டு மதுரை உயர்மறைமாவட்ட பொறுப்பு ஆயராக நியமிக்கப்பட்டார். கடந்த ஜூலை 5-ம் தேதி மதுரை உயர்மறை மாவட்டத்தின் புதிய பேராயராக அறிவிக்கப்பட்டார்.

● அந்தோணி சாமி சவரிமுத்து

புதிய பேராயர் பொறுப்பேற்பு நிகழ்வு, மதுரை புனித பிரிட்டோ மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஆகஸ்ட் 2-ம் தேதி மாலை 4 மணிக்கு நடைபெறுகிறது.

இந்நிகழ்வுக்கு திருத்தந்தைக்கான இந்தியத் தூதர் ஜியோ போல்டோ ஜெரல்லி தலைமை வகிக்கிறார். இதற்கான ஏற்பாடுகளை மதுரை உயர்மறை மாவட்ட தொடர்பாளர் ஜெரோம் ஏரோனிமுஸ் மேற்கொண்டு வருகிறார்.

காளான் வளர்ப்பு பயிற்சி

■ மதுரை

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் காளான் வளர்ப்பு மற்றும் மதிப்புக் கூட்டுதல் குறித்து ஒரு நாள் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

விவசாயிகள், பெண்கள் ஆகியோரை தொழில் முனைவோராக மாற்றும் வகையில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்புக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் இ.சுப்பிரமணியன் தலைமை வகித்தார்.

மஸ்ரூம் ப்ராடக்ட்ஸ் நிர்வாக இயக்குநர் சுந்தரம் சாய், காளான் வளர்ப்பு தொழில் நுட்பங்கள் குறித்து பேசினார். மனையியல் துறை விஞ்ஞானி கி.ஜோதிலட்சுமி உலர் காளான் தயாரிக்கும் தொழில்நுட்பங்கள் குறித்து செயல்முறை விளக்கம் அளித்தார்.

பெண்ணிடம் அத்துமீறிய 3 பேர் கைது

■ தேனி

சென்னை மற்றும் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த அழகுக் கலை நிபுணர்கள் மலர்விழி (34), தேவிகா சுபா (25). இவர்கள் இருவரும் தேனியில் உள்ள அழகுக்கலை நிலையத்தில் வேலை பார்த்து வருகின்றனர். நேற்று முன்தினம் இரவு, இவர்கள் நண்பர் பிரபு என்பவருடன் வீரபாண்டி பெரியாற்றின் தடுப்பணை பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது, அங்கு வந்த வீரபாண்டியைச் சேர்ந்த விக்னேஷ் மலர் விழியிடம் அத்துமீற முயன்றார். அவருடன் வந்த குணாள், ஹரிஹரன் ஆகியோர் தேவிகா சுபா, பிரபு ஆகியோரை தாக்கினர். சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் ஓடிவந்து இவர்களை மீட்டனர். வீரபாண்டி போலீஸார் மூவரையும் கைது செய்து விசாரிக்கின்றனர்.

பெண் கொலையில் சகோதரர்களுக்கு ஆயுள் சிறை

■ மதுரை

பெண் கொலை வழக்கில் இருவருக்கு ஆயுள் தண்டனை வழங்கி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை மாவட்டம் அலங்கா நல்லூர் அருகே வடுகபட்டியைச் சேர்ந்தவர் ராஜம்மாள். இவருடன் 7.2.2019-ல் அதே பகுதியைச் சேர்ந்த மகேஸ்வரி என்பவர் இடப்பிரச்சினை தொடர்பாக தகராறில் ஈடுபட்டார். இவருக்கு ஆதரவாக வந்த சிலர் இரும்பு உள்ளிட்ட ஆயுதங்களால் ராஜம்மாளையும், அவரது மகன் ராம்குமாரையும் சரமாரியாக தாக்கினர். இதில் ராஜம்மாள் இறந்தார். இந்தக் கொலை தொடர்பாக வீமன், இவரது மகன்கள் கமல்பாண்டி, செல்வ பாண்டி, ராஜபாண்டி, வீமன் மனைவி மகேஸ்வரி ஆகியோரை அலங்காநல்லூர் போலீஸார் கைது செய்தனர்.

இந்த வழக்கின் விசாரணை மதுரை 4-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்து வந்தது. விசாரணையின்போது வீமன் இறந்து விட்டார். அரசு தரப்பில் வழக்கறிஞர் ஜவஹர் ஆஜராகி வாதிட்டார்.

கமல்பாண்டி, செல்வ பாண்டிக்கு ஆயுள் தண்டனையும், தலா ரூ.10 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி ஜான்சுந்தர்லால் சுரேஷ் தீர்ப்பளித்தார், மேலும் ராஜபாண்டி மற்றும் மகேஸ்வரியை விடுதலை செய்து உத்தரவிட்டார்.

வேளாண் அதிகாரி பதவி உயர்வுக்கு அடுத்த நாள் ஓய்வு

■ மதுரை

மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநராக இருந்த சுப்புராஜ் பதவி உயர்வு பெற்ற அடுத்து நாளே ஓய்வு பெற்றார்.

மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநராக இருந்தவர் சுப்புராஜ். இவர் விவசாயிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அதற்குத் தீர்வுகாண உதவினார்.

தேவையான ஆலோசனைகளையும் விவசாயிகளுக்கு வழங்கி வந்தார். மேலும், மண் பரிசோதனை, பயிர் பாதுகாப்பு, விதை உற்பத்தி போன்ற தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்த உதவினார்.

குறிப்பாக மக்காச்சோளப் பயிரில் ஏற்பட்ட பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கையை எடுத்ததுடன், மானிய விலையில் உயர் ரக மக்காச்சோள விதைகளை விவசாயிகளுக்கு வழங்கவும் நடவடிக்கை மேற்கொண்டார்.

இந்நிலையில் கடந்த 30-ம் தேதி சென்னை வேளாண்மை கூடுதல் இயக்குநராக (விதைகள்) பதவி உயர்வு பெற்றார். அடுத்த நாளான 31-ம் தேதி (நேற்று) ஓய்வு பெற்றார். இதனால், மதுரையில் வேளாண்மை இணை இயக்குநர் பணியிடம் காலியாக உள்ளது.

இன்னும் ஒரு வாரத்தில் புதிய இணை ஆணையர் நியமிக்கப்படுவார் என வேளாண்துறை அலுவலர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

நகரில் நடப்பவை

மதுரை

- ஆடி முளைக்கொட்டு உற்சவம் 6-ம் நாள்: மீனாட்சி அம்மன் கோயில், தங்கச் சப்பரம் காலை 9, கிளி வாகனம், இரவு 7.
- மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு: ஏஎன்டி கல்வி மருத்துவம் சமூக மேம்பாட்டு அறக்கட்டளை, மதுரை காந்தி என்எம்ஆர் சுப்பராமன் மகளிர் கல்லூரி, கருத்தரங்கக் கூடம், பிற்பகல் 1.30.
- சர்வ சமய அமைதி பிரார்த்தனை: செப்சிரா, சேவாலயம் மாணவர் இல்லம், செனாய் நகர், மாலை 6.

பெரியகுளம்

- கல்லூரி ஆண்டு விழா: தலைமை- டீன் எஸ்.சரஸ்வதி, சிறப்புரை- எஸ்பி. ஸ்நேகபிரியா, தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், பிற்பகல் 2.30.

தமிழ்நாடு அரசு

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

சிவகாசி வட்டம், விருதுநகர் மாவட்டம்.

அறிவிக்கை

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டத்தில் காலியாக உள்ள 4 கிராம உதவியாளர்கள் பணியிடங்களுக்கு இன சுழற்சி முறையில் நேரடி நியமனம் செய்து நிரப்புவது தொடர்பான 21.07.2025 மற்றும் 22.07.2025 நாளன்று தினகரன் மற்றும் தி இந்து தமிழ்திசை நாளிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண். அ3/47/2025 இல் உள்ள இனச்சுழற்சி அட்டவணையினை பின்வருமாறு திருத்தி வாசித்துக்கொள்ளவும்.

வ. எண்	இனச் சுழற்சி எண்	பிரிவு	பாலினம்	முன்னுரிமை/ முன்னுரிமை அல்லாதது	காலியிடம் எண்ணிக்கை
1.	20	பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) (முஸ்லீம் அல்லாதவர்)	பொது	முன்னுரிமை பெற்றவர்	Destitute Widow
2.	21	பொதுப்பிரிவினர் (GT)	பொது	முன்னுரிமை பெற்றவர்	Inter Caste Married Couple
3.	22	ஆதிதிராவிடர் (SC)	பொது	முன்னுரிமையற்றவர்	
4.	23	மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் (MBC/DNC)	பெண்	முன்னுரிமையற்றவர்	PSTM

செ.ம.தொ.இ / 857 / வரைகலை / 2025

வருவாய் வட்டாட்சியர், சிவகாசி.

பெண்ணிடம் அத்துமீறிய 3 பேர் கைது

■ தேனி

சென்னை மற்றும் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த அழகுக் கலை நிபுணர்கள் மலர்விழி (34), தேவிகா சுபா (25). இவர்கள் இருவரும் தேனியில் உள்ள அழகுக்கலை நிலையத்தில் வேலை பார்த்து வருகின்றனர். நேற்று முன்தினம் இரவு, இவர்கள் நண்பர் பிரபு என்பவருடன் வீரபாண்டி பெரியாற்றின் தடுப்பணை பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது, அங்கு வந்த வீரபாண்டியைச் சேர்ந்த விக்னேஷ் மலர் விழியிடம் அத்துமீற முயன்றார். அவருடன் வந்த குணாள், ஹரிஹரன் ஆகியோர் தேவிகா சுபா, பிரபு ஆகியோரை தாக்கினர். சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் ஓடிவந்து இவர்களை மீட்டனர். வீரபாண்டி போலீஸார் மூவரையும் கைது செய்து விசாரிக்கின்றனர்.

நீதிபதிக்கு எதிராக புகார் அளித்ததால் இந்து அமைப்புகளால் உயிருக்கு ஆபத்து

வழக்கறிஞர் வாஞ்சிநாதன் குற்றச்சாட்டு

■ மதுரை

உயர் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராகப் புகார் அளித்ததால் எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என மதுரை வழக்கறிஞர் வாஞ்சிநாதன் தெரிவித்தார்.

மதுரையைச் சேர்ந்த வழக்கறிஞர் வாஞ்சிநாதன், உயர் நீதிமன்ற நீதிபதி ஜிஆர் சுவாமிநாதனுக்கு எதிராக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு புகார் ஒன்றை அனுப்பினார். இப்புகார் மனு பற்றிய தகவல்கள் சமூக வலைதளங்களில் வெளியாகின. இது தொடர்பாக வழக்கறிஞர் வாஞ்சிநாதன் மதுரை மாநகர சைபர் கிரைம் போலீஸில் புகார் கொடுத்தார்.

இதன் அடிப்படையில் விசாரணைக்காக ஆஜராக வாஞ்சிநாதனுக்கு காவல்துறை சம்மன் அனுப்பியது.

இதைத் தொடர்ந்து அவர் நேற்று மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகிலுள்ள சைபர் கிரைம் காவல்நிலைய அலுவலகத்தில் ஆஜரானார். அவரிடம் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக விசாரணை நடந்தது.

இதன் பின், வாஞ்சிநாதன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பாஜக, ஆர்எஸ்எஸ் அமைப்பைச் சேர்ந்தவர்கள் சமூக வலைதளங்களில் என்னைப் பற்றி அவதூறான கருத்துக்களைப் பதிவு செய்து வரும் நிலையில் எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

நீதிபதி ஜிஆர் சுவாமிநாதனுக்கு ஆதரவாகவும், எனக்கு எதிராகவும் இந்து அமைப்புகள் போராட்டங்கள் நடத்துகின்றன. விரைவில் திமுக உள்ளிட்ட அனைத்து பிரதான கட்சிகளின் முக்கிய நிர்வாகிகளைச் சந்திக்க உள்ளேன்.

திமுக எனக்கு ஆதரவாக எந்தஓர் அறிக்கையையும் தற்போது வரை வெளியிடவில்லை. திமுகவினர் எனக்கு வீடு கொடுத்ததாக சமூக வலைதளங்களில் பரப்புகின்றனர். இதை நிரூபித்தால் உரியவருக்கு அந்த வீட்டைக் கொடுக்க தயாராக உள்ளேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

சீராக குடிநீர் விநியோகம் செய்யக்கோரி பழநியில் நகராட்சி கவுன்சிலர் தர்ணா

■ பழநி

பழநி நகராட்சி 22-வது வார்டுக்கு முறையாக குடிநீர் விநியோகம் செய்யக் கோரி, ஆளுங்கட்சி கவுன்சிலர் தர்ணாவில் ஈடுபட்டார்.

பழநி நகராட்சி 22-வது வார்டு பகுதியில் 1,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர்.

கடந்த ஒரு வாரமாக இப்பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்படாததால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். தனியாரிடம் தண்ணீர் விலைக்கு வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து நகராட்சி அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் நேற்று பழநி நகராட்சி அலுவலக நுழைவு வாயிலில் திமுகவைச் சேர்ந்த கவுன்சிலர் பஜ்லூர் ரகுமான் தர்ணாவில் ஈடுபட்டார்.

அப்போது, சீராக குடிநீர் விநியோகிக்கப்படும் என நகராட்சி அதிகாரிகள் உறுதியளித்தனர்.

இதையடுத்து, கவுன்சிலர் போராட்டத்தை கைவிட்டார். ஆளுங்கட்சி கவுன்சிலர் போராட்டத்தில் ஈடுபட்டதால் நகராட்சி அலுவலகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: 8/6-1B, கிழக்கு மாரியம்மன் கோயில் தெரு, ராசி மஹால் அருகில், பாரதியார் நகர், கம்பம், தமிழ்நாடு 625516

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத் தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1660210170000003 1.Mr.கொடியரசன் 2.Mrs.வினோதினி	(I) 23.05.2023 (ii) 18.05.2023 அன்றுள்ளபடி ₹ 4,98,604/- (ரூபாய் நான்கு லட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து அறுநூற்று நான்கு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 12.09.2023 & நேரடி சுவாதீனம் - 04.01.2025	27.05.2025 அன்றுள்ளபடி ₹ 6,25,885.64 (ரூபாய் ஆறு லட்சத்து இருபத்தைந்தாயிரத்து எண்ணூற்று எண்பத்தைந்து மற்றும் பைசா அறுபத்து நான்கு மட்டும்)	₹ 7,20,000/- (ரூபாய் ஏழு லட்சத்து இருபதாயிரம் மட்டும்)	₹ 72,000/- (ரூபாய் எழுபத்து இரண்டாயிரம் மட்டும்)

சொத்து விவரம்: பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் கம்பம் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட பழைய வார்டு எண்.3, புதிய வார்டு எண்.4, **சுக்கன்கல்பட்டி மெயின் ரோடு, பழைய கதவு எண்.57,** சொத்து வரி மதிப்பீடு எண்.1500 காலி மனை இதில் கிழக்கு பக்கத்திலுள்ள வீட்டு சொத்தின் புதிய சொத்து வரி மதிப்பீடு எண். 4281, வீட்டின் புதிய கதவு எண்.57, **கீழகூடலூர் கிராமம், தேனி மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக தெற்கில் 13¼ அடி மற்றும் வடக்கில் 14½ அடி, வடக்கு தெற்காக கிழக்கு மற்றும் மேற்கில் 30 அடி, **ஆக மொத்தம் 416¼ அதற்கு சமமான 38.68 சதுர மீட்டர் காலி மனை அதில் கட்டப்பட்டுள்ள R.C.C. வீட்டு கட்டிடம், அதன் கதவு எண்.57, தண்ணீர் வரி எண்.4175, சொத்து வரி மதிப்பீடு எண்.4281 மற்றும் மின்சார இணைப்பு S. Co. No. D327** அதன் டொபசிட்கள் மற்றும் இதர வசதிகள். சொத்தின் நத்தம் சர்வே எண்.1226. எல்லைகள்: வடக்கு: சுக்கன்கல்பட்டி மெயின் ரோடு, கிழக்கு: வடக்கு-தெற்கு வழிப்பாதை, மேற்கு: பொன்ராம்-க்கு சொந்தமான சொத்து, தெற்கு: மூக்கதேவர் மற்றும் மற்றவர்களுக்கு சொந்தமான சொத்து.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 12.09.2025 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
தேதி: 11.09.2025 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	10.09.2025 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mr.பரதன் - 93622 76767 / Mr.கிருபாகர் – 94455 08743

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob.74182 81709) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's-7291918824,25,26 support email id:-support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

தேதி: 01.08.2025, இடம்: பெங்களூரு

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

இந்து தமிழ் திசை

பொறுப்பல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏற்படலும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by Sri R.Barathan, Indian, Survey Nos. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRP Act).